**அகலவத்த பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அகலவத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அகலவத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.27 முதல் 3.32 பந்திக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக தயாரிக்கப்படும். | தொடர்புடைய நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணியொன்றின் உரித்து கோருவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 266,587 மீண்டெழும் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2024 இன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 767,520 பெறுமதியான இயந்திரங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது தீர்த்துவைக் கப்பட்ட ரூபா 197,550 ஆன கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வங்கிக் கணக்கில் காசேட்டின் பிரகாரம் காசு மீதி ரூபா 1,230,406 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,134,889 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,218,263 ஆன உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதியில் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய தவணை பணம் சீராக்கப்பட்ட பின்னர் மீதி ரூபா 1,081,751 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,080,530 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வேறுபாடுகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படுகின்றது. | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104 | அகலவத்த பால் பண்ணையில் காணப்பட்ட குளிரூட்டி தொலைந்தமை தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொறுப்புவாய்ந்த நபரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி நடவடிக்கைகளை மேற் கொள்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 571 | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 15 அலகுகளில் இருந்து அறவிடப்பட்ட கேள்விவைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 403,908 மற்றும் 2004 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 5,000 மற்றும் ரூபா 4,500 ஆன பிணை வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 36,892,848 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 23,720,050 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 3, 647,580 | 3,518,563 | 2,784,743 | 1,107,353 | 4,377,989 | 4,448,413 | 3,699,567 | 1,586,267 |
| (ii) | வாடகை | 6,835,297 | 6,835,297 | 6,519,597 | 315,700 | 5,995,500 | 5,872,772 | 5,680,964 | 191,808 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,260,790 | 1,179,877 | 1,179,877 | - | 420,000 | 378,792 | 378,792 | - |
| | மொத்தம் | 11,743,667 | 11,533,737 | 10,484,217 | 1,423,053 | 10,793,489 | 10,699,977 | 9,759,323 | 1,778,075 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆண்டிற்குக் குறைந்த நிலுவை ரூபா 366,112 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 414,218 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 147,195 தொகையும் மற்றும் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 147,821 தொகையும் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,807,500 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 11,000,000 ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் சபைக்குச் சொந்தமான காணியொன்று அனர்த்த முகாமைத்துவ நிலைய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணித்தல் தொடர்பாக உரிய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை யொன்று சபையிடம் காணப்படாதிருந்ததுடன் உரிய நிர்மாணங்களின் நியமம், தரத்தன்மை போன்றவை பரீட்சிக்காமல் 2016 ஆம் ஆண்டில் சபையால் இந்தக் கட்டிடம் கையேற்கப்பட்டிருந்தது. | எழுத்து மூல உடன்படிக்கையொன்றின் மூலம் முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் வெளித்தரப்பினரால் நிர்மாணித்தல் மேற்கொள்ளும் போது முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கட்டிடம் கையேற்கப்பட்ட ஆண்டில் அதன் முன்பக்கத்தில் ஒரு பகுதி உடைந்து விழுந்திருந்ததுடன் உரிய நியமம் இன்றி அமைக்கப்பட்ட கட்டிடம் தொடர்பாக தர அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் அதனை மீண்டும் உடையாதிருப்பதற்குமான நடவடிக்கை களை திட்டமிடுவதற்காக சபைக்கு | கட்டிடத்தை மீண்டும் உடைத்து அகற்றுவதைத் தடுப்பதற்கும் மற்றும் அருகில் காணப்படுகின்ற கட்டிடங்களைப் பாதுகாப்பதற்கும் செலவினம் செலவிடப் பட்டுள்ளது. | சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடல் வேண்டும். |

ரூபா 627,745 செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் 2020ஆம் ஆண்டின் போது கட்டிடம் செயற்பாடற்றமையினால் உடைத்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நூலகத்தினால் 08 வருடங்களுக்கு முன்னிருந்து வாசகர்களுக்கு கையளிக்கப்பட்ட 35 புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கையளிக்கப்பட்ட நூலகப் புத்தகங்களை உரிய கால எல்லையில் மீண்டும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக சபையினால் தீர்த்துவைக்கப்படாத கடன் மீதி ரூபா 188,756 ஆகும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட கால கடன் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 02 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை திருத்த வேண்டியிருந்த போதிலும் பொதுச் சந்தையில் கடைகள் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் 02 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை திருத்தப்படல் வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான புறோட்டோன் ரெக் வண்டி மற்றும் கல் உருளை 2020 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | அதனை வேறு சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பு வேலி எல்லை அமைக்க வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான எந்தவொரு மயான நிலங்களுக்கும் வேலி எல்லை அமைக்கப்பட்டிருக்க வில்லை. | மயான நிலங்களை கையளித்தலில் தாமதம் ஏற்பட்டிருந்தமையும் கையளிக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு முறைமையொன்று பின்பற்றப்படும். | விரைவாக மயான நிலங்களை கையேற்று பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) அகலவத்த பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 25 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | இந்த காணி பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக மயான நிலங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 160,170 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |